செய்கிறபோது, தனியார் நிறுவனங்கள் வியாபார நோக்கோடு பலவிதமான கலப்படங்களுடன் உற்பத்தி செய்கின்றன. அரசைப் பொறுத்தவரையில், கால்நடைத் துறையின் நெறிகாட்டுதலின்படி, எந்தவிதமான கலப்படமும் இல்லாமல் தீவனங்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். இலாப நோக்கம் இல்லாமல் அவர்களுக்கு மானிய விலையில் வழங்கி வருகிறோம். எந்தெந்த Unions நஷ்டத்தில் இயங்குகின்றனவோ, அவற்றிற்கு விற்பனை விலையில் சுமார் ரூ.7/–ம், அதேபோன்று, சற்று இலாபம் குறைவாக இருக்கும் union–க்கு ரூ.2/–ம் மானியம் கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். ஆகவே, தற்போது ஆண்டொன்றுக்கு ரூ.770 கோடி நட்டத்தில் இயங்குகிற இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், அதைப் பொருட்படுத்தாமல் வியாபார நோக்கில்லாமல் விவசாயிகள் நலன் பெறவேண்டுமென்றும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கால்நடைகளுக்குச் சரியான முறையில் தீவனங்கள் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும்தான் இதனை நாம் செய்துகொண்டு வருகிறோம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வழங்கப்படும் மானியத்தை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

விளையாட்டுத் திடல்

***12064—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திம்மாவரம் ஊராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 5]

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி, திம்மாவரம் ஊராட்சியில் விளையாட்டுத் திடல் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு, அதற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், திம்மாவரம் ஊராட்சி, மகாலட்சுமி நகரில் ஒரு ஏக்கரில் விளையாட்டுத் திடல் அமைக்க இடம் இருக்கிறது. ஆனால், அந்த இடம் விளையாடுவதற்குப் பயன்படுத்த முடியாத நிலையில் புதர்கள் மண்டியும், மழைக் காலங்களில் அதிகளவு மழை நீர் தேங்கியும், விளையாட்டுத் திடலைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, அந்த விளையாட்டுத் திடலைச் சரிசெய்து, சுற்றுச் சுவர் அமைத்து, அந்தப் பகுதியில் உள்ள மாணவ, மாணவியர், இளைஞர்கள் பயன்பெறும் விதமாக அனைத்துவிதமான விளையாட்டுக்களுக்கான வசதிகளை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில் கடந்த ஆண்டு, மாநில அளவில் நடைபெற்ற*

முதலமைச்சர் கோப்பைக்கான கைப்பந்து போட்டியில் செங்கல்பட்டு மாவட்ட அணி வெற்றி பெற்றிருக்கிறது. அந்த அடிப்படையில் புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற செங்கல்பட்டு மாவட்டத்தில் வெம்பாக்கம் ஊராட்சியில் இருக்கின்ற மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் தமிழக அரசின் புறம்போக்கு நிலத்தில் 9.78 ஏக்கர் இடம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், திம்மாவரம் ஊராட்சி, மகாலட்சுமி நகரிலிருக்கின்ற அந்த விளையாட்டுத் திடலை மேம்படுத்துவதற்கான பணிகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு தொகுதியில், மறைமலைநகர் நகராட்சியில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்க வரைபடத்துடன் கருத்துரு ஏற்கெனவே அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த நகராட்சியில் ஒன்றரை ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் சுமார் ரூ.3 கோடியில் அனைத்து வசதிகளுடன்கூடிய நீச்சல் குளம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைமலைநகர் நகராட்சியில் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கும், அந்த நகராட்சியிலிருக்கின்ற பகுதியில் நீச்சல் குளம் அமைப்பதற்கும் துறையின் அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, அதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பரிசீலித்து, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி* S. *விஜயதரணி அவர்கள்.*

திருமதி S. விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையால் பேரூராட்சியில்* St. Mary's *அரசு உதவிபெறும் பள்ளியின் நிலத்தில், விளையாட்டுத் திடல் அமைப்பதற்காக 11 ஏக்கர் நிலத்தை அரசுக்கு வழங்க ஒப்புதல் கொடுத்த நிலைமையில், அரசு துறை ரீதியாகவும் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான மதிப்பீடு செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த விளையாட்டுத் திடல் எங்கள் தொகுதியில் அமைக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, கடையால் பேரூராட்சியில் இருக்கின்ற* St. Mary's *பள்ளிக்கான 11 ஏக்கர் நிலத்தினை தமிழக அரசின்*

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துகளின் அடிப்படையில், அதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட இளைஞர்கள் அதிக அளவில் விளையாட்டில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், விளையாட்டில் முறையாகப் பயிற்சி அளிப்பதற்கு விளையாட்டுத் திடல் இல்லாத நிலை உள்ளது. தொகுதியிலிருந்து விளையாட்டு வீரர்கள், மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் கலந்துகொண்டு தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். அரசு இடமும் 439/2–ல் 7 ஏக்கர் இடமும் உள்ளதால் இளைஞர்கள் நலன் கருதி சர்வதேச தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 7 ஏக்கர் நிலப் பரப்பில் இருக்கின்ற அந்த இடத்தில் சர்வதேச தரத்துடன்கூடிய விளையாட்டு மைதானத்தை அமைத்துத் தருமாறு கேட்டிருக்கிறார்கள். அரசின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

தொழிற்பயிற்சி நிலையம்

***8178—திரு. க.சொ.க. கண்ணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, தா.பழூரில் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. கண்ணன் அவர்கள், தங்கள் தொகுதியில் அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஜெயங்கொண்டம் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், முற்றிலும் விவசாயம் நிறைந்த, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியாகும். இங்கு நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்*